www.Padasalai.Net www.TrbTnpsc.com

KK11T

கன்னியாகுமரி மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023

-----

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 90

குறிப்பு: 1) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

2) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி - I

குறிப்பு: I) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

II) **கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) பொருத்தமான இலக்கிய வடிவம் எது?

அ) மதிலிக் குருவிகள் - மரபுக் கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை

இ) யானை டாக்டர் - குறும்புதினம் ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

2) அண்ணாமலையாருக்குத் தொடர்பில்லாத நூல் எது?

அ) நெறிக்கட்டு ஆ) கோமதி அந்தாதி

இ) வீரைத் தலபுராணம் ஈ) கருவை மும்மணிக்கோவை

3) **சரியானதைத் தேர்ந்தெடுக்க:**

அ) வரை - மலை ஆ) வதுவை - திருமணம்

இ) வாரணம் - யானை ஈ) புடவி - கடல்

(i) அ, ஆ, இ - சரி; ஈ - தவறு (ii) ஆ, இ, ஈ - சரி; அ - தவறு

(iii) அ, இ, ஈ - சரி; ஆ - தவறு (iv) அ, ஆ, ஈ - சரி; இ - தவறு

4) தமிழின் முதல் பாவடிவ நாடகநூல்

அ) இரகசியவழி ஆ) மனோன்மணீயம்

இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

5) ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்.

ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியைத் திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.

இ) எழுத்துமொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.

ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.

6) கூற்று 1 : தஞ்சைப் பெரிய கோவிலுள்ள ஓவியங்களை எஸ்.கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.

கூற்று 2 : அங்குள்ள சோழர் காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு. ஆ) கூற்று இரண்டும் தவறு.

இ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி. ஈ) கூற்று இரண்டும் சரி.

7) நாகர்கோவிலைச் சேர்ந்த எழுத்தாளர்

அ) பிரபஞ்சன் ஆ) சுந்தர ராமசாமி

இ) இந்திரன் ஈ) ஆர். பாலகிருஷ்ணன்

8) மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்

இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

Scanned with CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

9) ஒட்டுப் போடாத
ஆகாயம் போல - இந்த
உலகமும் ஒன்றேதான் ........ - இக்கவிதையில் பயின்றுவருவது
அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

10) துன்பப்படுபவர் ...............
அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

11) இளையராஜா, ஏ.ஆர். இரகுமான் இருவரும் பெறாத விருது
அ) கலைமாமணி விருது ஆ) தாதாசாகெப் பால்கே விருது
இ) லதா மங்கேஷ்கர் விருது ஈ) இவற்றில் எதுவுமில்லை

12) பிழையான தொடரைக் கண்டறிக.
அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.
ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.
இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.
ஈ) யானைகளால் வெகுதொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறியமுடியும்.

13) Book Review என்பதன் கலைச்சொல்
அ) ஏடு ஆ) புத்தகம்
இ) பாடநூல் மதிப்புரை ஈ) புத்தக மதிப்புரை

14) 'கொள்' என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) கொள்ளும் ஆ) கொள்வோன் இ) கொள்க ஈ) கொள்ளுதல்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக:** **3×2=6**

15) ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
16) காவடிச்சிந்து என்பது யாது?
17) மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?
18) பாடாண் திணை - விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **2×2=4**

19) பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது. ஏன்?
20) சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?
21) இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×2=14**

22) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**
அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
ஆ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

23) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
உலை, உளை, உழை

24) பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

25) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**
கால்நடை (அல்லது) நஞ்சிருக்கும்

26) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**
அ) மலிந்த ஆ) வென்றேன்

27) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**
அ) கற்பிளந்து ஆ) உழுதுழுது

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



28) மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக:

அ) Trs ஆ) Dt

29) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:

குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

30) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:** **2×4=8**

31) சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32) புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறைவழி நின்று கூறுக.

33) "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்"

- **இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

34) தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:** **2×4=8**

35) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

36) ஆனந்தரங்கரின் இறுதிக்கால நாட்குறிப்புகள் பற்றிக் குறிப்பிடுக.

37) ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

38) மெடீரியலிஸம் என்றால் என்ன?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** **3×4=12**

39) சொற்பொருள் பின்வருநிலை அணியை விளக்குக.

**(அல்லது)**

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

- **இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

40) **இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக:**

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

- **நாமக்கல் கவிஞர்.**

41) **பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக:**

அ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

**(அல்லது)**

ஆ) போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து

42) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.

Scanned with CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43) தமிழாக்கம் தருக

1. The Pen is mightier than the sword.
2. A people without the knowledge of their past history and culture is like a tree without roots.
3. An eye for an eye only ends up making the whole world blind.
4. Simplicity is nature's first step, and the last of art.

43) காது கேளாதவர்களுக்கான மாற்றுவினா:

செந்தமிழ்ச் செம்மல் 'டாக்டர் ஜி.யு.போப்'. 1839 ஆம் ஆண்டில், தென்னிந்தியாவுக்கு வந்தார். சென்னையை அடைந்த போப், 'சாந்தோம்' என்னும் இடத்தில் முதன்முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார். ஆங்கிலேயரான அவரின் தமிழுரை கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது. தமிழ்மொழியைப் பயிலத்தொடங்கிய சிறிது காலத்திலேயே, ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தில், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை. போப் அவர்கள் தஞ்சாவூரில் வாழ்ந்தபோது, தொல்காப்பியம், நன்னூல் முதலிய பேரிலக்கண நூல்களைப் பாடசாலை மாணவர் படிப்பது எளிதன்று என்பதைக் கண்டு, சிறிய தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை எழுதி வெளியிட்டார்.

**வினாக்கள்:**

1. செந்தமிழ்ச் செம்மல் என்று அழைக்கப்படுபவர் யார்?
2. ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த தமிழ்நூல்கள் எவை?
3. ஜி.யு.போப் முதன்முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றின இடம் எது?
4. பேரிலக்கண நூல்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக:** **3×6=18**

44) அ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

**(அல்லது)**

ஆ) ''அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்'' - இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

45) அ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) 'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46) அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

**(அல்லது)**

ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **4+2=6**

47) அ) 'ஆக்கியோன்' - எனத் தொடங்கும் நன்னூல்-பாயிரம் பாடல்.

ஆ) 'பகை' - என முடியும் குறள்.

----------

Scanned with CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com